பதிவு எண் | | | | | | | |

# மாதாந்திரத் தேர்வு, ஜூலை - 2019

பத்தாம் வகுப்பு

நேரம் : 2-00 மணி] சமூக அறிவியல் [மொத்த மதிப்பெண்கள் : 50

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : 3×1=3

1. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் எனக் கூறியவர் யார் ?
அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன்யாட்சென் ஈ) மாசேதுங்
2. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் -----.
அ) ஊட்டி ஆ) ஆனைமுடி இ) கொடைக்கானல் ஈ) ஜின்டர்கடா
3. நமது அடிப்படை உரிமைகள் ------ நாடுகளின் அடிப்படை உரிமைகளைச் சார்ந்து உருவாக்கப்பட்டது.
அ) அமெரிக்க ஐக்கிய அரசு ஆ) சோவியத் ரஷ்யா இ) கனடா ஈ) ஐக்கிய அரசு

II கோடிட்ட இடங்களை நிரப்புக : 3×1=3

4. ஜப்பான் ----- தீபகற்பத்தை இணைத்துக் கொண்டது.
5. இந்தியத் திட்ட நேரமானது கிரீன்வீச் நேரத்தை விட ----- கூடுதலாகும்.
6. இந்தியாவின் மிகப் பெரிய துறை ----- துறையாகும்,

III பொருத்துக : 3×1=3

7. பிரெஸ்ட்-லிடோவஸ்க் உடன்படிக்கை - 1962
8. பிட் தீவு - ரஷ்யாவும் ஜெர்மனியும்
9. தேசிய அவசர நிலை - பறவைகள் சரணாலயம்

IV ஏதேனும் 4 வினாக்களுக்கு சுருக்கமான விடையளி. (ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையளி) : 4×2=8

பிரிவு-அ

10. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (அல்லது)
பதுங்குக் குழிப்போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன ?

பிரிவு-ஆ

11. இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக. (அல்லது)
இலட்சத் தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.

பிரிவு-இ

12. அரசியலமைப்பு என்றால் என்ன ? (அல்லது)
இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட செம்மொழிகள் எவை ?

பிரிவு-ஈ

13. GDPயின் முக்கியத்துவத்தை எழுதுக. (அல்லது)
இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்களை எழுதுக.

V ஏதேனும் இரண்டினை வேறுபடுத்துக : 2×2=4

14. இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்.
15. மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள்
16. இமாத்ரி மற்றும் இமாச்சல்

(திருப்புக

CS Scanned with CamScanner
QB365 https://www.qb365.in/materials/

VI கீழ்க்கண்ட தலைப்பு ஒன்றினை தேர்ந்தெடுத்து அவற்றின் அனைத்து வினாக்களுக்கும் விடையளி : 1x4=4

17. ஏகாதிபத்தியம்

அ) முற்றுரிமை முதலாளித்துவம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன ?

ஆ) ஜப்பான் எவ்வாறு ஒரு ஏகாதிபத்திய சக்தியாக வடிவெடுத்தது ?

இ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு காலனிகள் ஏன் தேவைப்பட்டன ?

ஈ) முதலாளித்துவம் உருவாக்கிய முரண்பாடுகள் யாவை ?

18. பால்கன் போர்கள்

அ) பால்கன் கழகம் ஏன் உருவாக்கப்பட்டது ?

ஆ) முதல் பால்கன் போரின் விளைவுகள் யாவை ?

இ) இப்போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள் யாவர் ?

ஈ) இரண்டாவது பால்கன் போரின் இறுதியில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் பெயரென்ன ?

VII காரணம் கூறுக : 2x2=4

19. இமய மலைகள் மடிப்பு மலைகள் என அழைக்கப்படுகின்றன

20. வடகிழக்கு மாநிலங்கள் "ஏழு சகோதரிகள்" என அழைக்கப்படுகின்றன

21. கோதாவரி ஆறு விருத்தகங்கா என அழைக்கப்படுகிறது

VIII கீழ்க்கண்டவற்றை விரிவாக்கம் செய்க : 2x1=2

22. GST

23. GVA

IX ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து விரிவாக விடையளிக்கவும் : 2x5=10

பிரிவு-அ

24. முதல் உலகப் போருக்கான முக்கிய காரணங்களை விவாதி. (அல்லது) அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.

பிரிவு-ஆ

25. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி. (அல்லது) GDPஐக் கணக்கிடும் முறைகள் யாவை ? அவைகளை விவரி.

X காலக்கோடு : 3x1=3

26. 1900 முதல் 1920 வரை ஏதேனும் 3 நிகழ்வுகளை எழுதுக.

XI உலக வரைபடத்தில் பின்வரும் நாடுகளைக் குறிக்கவும் : 3x1=3

27. அ) கிரேட் பிரிட்டன் ஆ) இத்தாலி இ) செர்பியா

28. இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும் : 3x1=3

அ) காரகோரம் ஆ) தக்காணப் பீடபூமி இ) இலட்சத் தீவுகள்

Scanned with CamScanner
QB365 https://www.qb365.in/materials/